**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070220225823

Volume: 7

Issue: 2

Month: October

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 15.07.2022

Accepted: 10.09.2022

Published: 01.10.2022

Citation:
Vimala Rani, M. "Arulmigu Ulagudaiya Amman Mulaippari Thiruvizha." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 2, 2022, pp. 34–42.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i2.5823

*Corresponding Author:
vimalkeerthi17@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Arulmigu Ulagudaiya Amman Mulaippari Thiruvizha

**M. Vimala Rani**
*Tamil Research Centre*
*Sree Sevugan Annamalai Collage, Devakottai, Tamil Nadu, India*

**Dr. M. Rethineswari**
*Assistant Professor in Tamil, Tamil Research Centre*
*Sree Sevugan Annamalai Collage, Devakottai, Tamil Nadu, India*
*https://orcid.org/0000-0002-9591-9508*

**Abstract**
Sivagangai District, Manamadurai Union of Periyakottai Village, The Presiding deity Arulmigu Ulagudaiya Amman Mulaippari Festival, is held by the Vellala community of Periyakottai.People of Periyakottai start preparation work for Mulaippari by collectingresidence tax. Then Dung collection, Sprouts collection, Sprouts soaking, Sprouts propagation process takes place in Mulaippari growing method. They conduct fun events like Kummi and Oyilattam during Mulaippari. Fasting for eight days and Picking Karagam up during the festival is not only an expression of devotion but also a basis of faith. The event of Mulaippari Thawing in Silamba River emphasizes the use of natural fertilizers for agriculture.

**Key Words:**
Prosperity Ritual, Sprouts Propagation, Karaikararkal, Athapuzhungal Rice, Brooding Chicken

**References**

1. Subramanian, P. *Tamil festivals and culture*
2. Dr. Gurusami Sithar & Dr. D. Gnanasekaran. *Tamil cultural history*

# அருள்மிகு உலகுடைய அம்மன் முளைப்பாரித் திருவிழா

*ம. விமலாராணி*
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை

*முனைவர் மா. ரெத்தினேஸ்வரி*
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை

***ஆய்வுச் சுருக்கம்***
*சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியத்திற்கு உட்பட்ட பெரியகோட்டை கிராமத்தின் கிராம தேவதையான அருள்மிகு உலகுடைய அம்மனுக்கு பெரியகோட்டை வாழ் வெள்ளாள இனப்பெருமக்கள் எடுக்கும் முளைப்பாரித் திருவிழாவில் குடிவரி வசூல் செய்தல், ஆயத்தப்பணிகள், எருசேகரித்தல், முத்து சேகரித்தல்முத்து ஊறவைத்தல் முத்து பரப்புதல், முளைப்பாரி வளர்க்கும் முறை, கரகம் எடுத்தல் நடைபெறுகின்றன. கும்மி கொட்டுதல், ஓயிலாட்டம் ஆடுதல் போன்ற மனமகிழ் நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன. திருவிழா நடைபெறும் எட்டு நாட்கள் விரதம் இருப்பது பக்தியின் வெளிப்பாடு மட்டுமல்லாமல் நம்பிக்கையின் அடிப்படையாகவும் விளங்குகிறது. முளைப்பாரியைச் சிலம்பாற்றில் மலையேத்தும் நிகழ்வானது வேளாண்மைக்கு இயற்கை உரம் பயன்படுத்துவதை வலியுறுத்துவதாக அமைகிறது.*
***முக்கியச் சொற்கள்:*** *நாட்டுப்புறவியல், அம்மன் வழிபாடு, சடங்கு, முளைப்பாரித்திருவிழா, உலகுடைய அம்மன், பெரியகோட்டை, வெள்ளாளர்*

## முன்னுரை

மனிதன் தோன்றிய நாள் முதல் இயற்கையின் பேருதவியால் வாழ்க்கைச் சக்கரம் உருண்டுகொண்டிருக்கிறது. மனிதன் இயற்கைக்கு விளைவிக்கும் ஊறினால் பேராபத்துகளும் பேரிழப்புகளும் நிகழ்கின்றன. காடுகளில் கிடைக்கும் காய் கனிகளை உண்டு வாழ்ந்த மனிதன் சமவெளிப் பகுதிகளை நாடியபோது வேளாண்மையில் செழிப்புற்றுத் திகழ்ந்தான். இதனடிப்படையில் இடி, மின்னல், மழை, மரம் போன்ற இயற்கை வழிபாடு தோன்றியது. நாளடைவில் தங்கள் சமூகப் பாதுகாப்பிற்காக இறந்தவர்களை நடுகல் நட்டு வழிபாடு செய்தார்கள். அதன் பின் அவர்களுக்கு உருவ வழிபாடு செய்து வந்தனர். இவ்வுருவ வழிபாட்டைத் தொடர்ந்து விழாக்கள் எடுக்கப்பட்டன. அவ்விழாக்களுள் ஒன்று முளைப்பாரித் திருவிழா. வேளாண்மை செழிக்க எழுந்த நிகழ்வு பெரும் விழாவாக கொண்டாடப்படுகிறது. பெரியகோட்டை கிராமத்தின் அருள்மிகு உலகுடைய அம்மன் கோயில் முளைப்பாரித் திருவிழாவை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கிராம தேவதை

சீர்மிகு சிவகங்கைச் சீமையில் பெண் தெய்வ வழிபாடு பெரும்பாலான கிராமங்களில் இன்றளவும் நீங்கா இடம் பெற்றவையாகவே இருந்து வருகிறது. கிராமங்களை ஏதாவது பேராபத்து,

இடர்களிலிருந்துகாப்பதன்பொருட்டுஉயிர் நீத்த மூதாதையர்களில் ஒருவரையே தெய்வமாக தொன்றுதொட்டு வழிபடுகின்றனர். இவை நாட்டார் தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு எனப்படுகிறது. அவ்வகையில் மந்தையம்மன், காளியம்மன், மாரியம்மன், அங்காளம்மன், உலகுடைய அம்மன், அழகுநாச்சியம்மன் போன்ற தெய்வங்கள் வழிபாடு செய்யப்படுகின்றன. கிராமங்களைக் காத்து வருவதால் கிராம தேவதையாக விழா எடுத்து சிறப்பிக்கப் பெறுகிறது.

### அருள்மிகு. உலகுடைய அம்மன்

சிவகங்கை மாவட்டத்தின் தென்மேற்கில் வெள்ளாளர் சமூகத்தைச் சார்ந்தோர் வாழ்ந்து வரும் ஏழூர் கிராமங்களுக்குத் தாய் கிராமமாகத் திகழும் பெரியகோட்டை கிராமத்தின் கிராம தேவதையாக அருள்பாலிக்கிறாள் அன்னை அருள்மிகு உலகுடைய அம்மன்.

### கோயில் அமைவிடம்

அம்மன் கோயிலான பெரியகோட்டை கிராமத்தின் தென்கிழக்கு மூலையில் சிலம்பாற்றின் மேல்கரையை ஒட்டி அமைந்துள்ளது. கோயிலின் வாயில்புறம் வடக்கு நோக்கி பெரியகோட்டை கிராமத்தைப் பார்த்தவாறு ஒரு கையில் சூலாயுதம் கொண்டு மக்கள் அனைவருக்கும் தனது நாற்கரங்களால் நல்லாசி வழங்குபவளாகத் திகழ்கிறாள் அன்னை அருள்மிகு உலகுடைய அம்மன்.

### முளைப்பாரி - விளக்கம்

வேளாண்மையின் தொடக்கக் காலத்தில் இருந்தே தமிழர் வித்துக்களின் தன்மையை அறிய முளைப்பாரி வளர்த்தனர். கடந்த வருடம் விளைவித்த நெல், பயிர் வகைகள் மற்றும் சிறு தானியங்களைக் குதிர், சாக்கு கள், கோட்டை கட்டியும் புழு, பூச்சிகள் அரிக்காது சேமித்து வைத்தனர். அவ்வாறு சேமித்து வைத்ததை வேளாண்மைக்கு வித்தாக பயன்படுத்துவதற்காகச் சோதித்தறிய சிறிதளவு எடுத்து முளைக்கட்டி வளர்த்து அதன் செழுமையைப் பார்த்த பின்னே விதைகளை விதைப்பதைத் தீர்மானம் செய்தனர். இதுவே காலப்போக்கில் முளைப்பாரியாக உருவெடுத்து பெண் தெய்வங்களுக்கு எடுக்கப்படும் பெரும் நிகழ்வாக இருந்து வருகிறது.

### வளமைச் சடங்கு

முளைப்பாரித் திருவிழா பெண்கள் சார்ந்த நிகழ்வாக இருந்து வருவதால் வளமைச் சடங்காக கருதப்படுகிறது. மேலும் முளைப்பாரியை மலை ஏத்துதல் நிகழ்வானது ஓடுகிற தண்ணீரில் நிகழ்த்தப் பெறுவதால் முளைப்பாரியில் உள்ள உரங்களும் விதைகளும் வயலில் பாயும் நீரில் கலப்பதால் செழுமை அடையும் என்பது இன்றளவும் நம்பிக்கையாகவே இருந்து வருகிறது.

### முளைப்பாரித் திருவிழா

பெரியகோட்டை கிராமத்தைக் காத்தருளும் உலகுடைய அம்மனுக்கு பெரியகோட்டை வாழ் வெள்ளாள இனப் பெருமக்கள் ஆண்டுதோறும் ஆடி மாதம் வளர்பிறை நாள்களில் எடுக்கும் திருவிழாவே முளைப்பாரித் திருவிழா. முளைப்பாரித் திருவிழா இன்றளவும் பெரியகோட்டை கிராமம் சார்ந்ததாகவே இருந்து வருகிறது.

அருள்மிகு உலகுடைய அம்மன் கோயில் நானூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்ததாகக் கூறுகிறார் கோயிலுக்குப் பூசை செய்யும் பூசாரி பாலா. இவர் கோயிலுக்கு வழிவழியாகப் பூசை செய்யும் பண்டாரம் இனத்தைச் சார்ந்தவர். உலகுடைய அம்மனுக்கு இவரின் முன்னோர் பூசை செய்யும் காலங்களில் இருந்தே முளைப்பாரித் திருவிழா நடைபெற்று வருவதாகச் செவிவழிச் செய்தியாகக் கூறுகிறார் பூசாரி பாலா.

### முளைப்பாரி கிராமக் கூட்டம்

முளைப்பாரித் திருவிழா ஆடி மாதம் நடைபெறுவதால் ஆனி மாதமே கிராமக் கூட்டம் நடைபெறுகிறது. கூட்டத்தில் குடி வரி எவ்வளவு என்று நிர்ணயம் செய்யப்படுகின்றது. விழாக்கள் நடைபெறும் நாள்களும் அறிவிக்கப்படுகிறது. வரியானது பெரியகோட்டை வெள்ளாள இனப் பெருமக்களின் பதினான்கு கரைகாரர்களில் முறைப்படி விழா நடைபெறும்போது நிருவகிக்கும் கரைகாரர்கள் குடி வரி வசூல் செய்து வரவு செலவு கணக்குகளைப் பார்த்துக்கொள்கின்றனர்.

### குடிவரி

பெரியகோட்டைக் கிராமத்தில் வெள்ளாள இனப் பெருமக்கள் தற்போது சுமார் 180 குடிகள் உள்ளன குடிவரியானது ஒரு வீட்டில் தாய் தந்தையருக்கு ஒரு மகன் இருந்தால் மகனுக்குத் திருமணம் ஆகும் வரை தாய் தந்தையர் வரி செலுத்துவர். மகனுக்குத் திருமணம் ஆன பின் அந்த வீட்டில் மகன் மட்டும் வரி செலுத்தினால் போதுமானது. தாய் தந்தையர் வரி செலுத்த வேண்டாம். ஒரு வீட்டில் இரண்டு அல்லது மூன்று மகன்கள் இருந்தால் அவரவருக்குத் திருமணம் ஆனபின் அவரவர் தனித் தனியாக வரி செலுத்த வேண்டும் என்பது பெரியகோட்டை கிராமத்தின் நியதி. குடிவரி தவிர முளைப்பாரி ஓடுகளுக்கென்று வரி வசூல் செய்வதில்லை; நன்கொடை வாங்குவதுமில்லை. நேர்த்திக்கடன் பெயரில் போடப்படும் முளைப்பாரி ஓடுகளுக்கு மட்டும் வரிவசூல் செய்வதாக ஜி. நந்தகோபால் கூறுகிறார்.

### திருவிழா ஆயத்தப் பணிகள்

முளைப்பாரி திருவிழா துவங்குவதற்கு முன் வெள்ளாள இனப்பெருமக்கள் வீடு வாசல் மற்றும் தெருக்களைச் சுத்தம் செய்கின்றனர். முளைப்பாரி நடைபெறும் ஒன்பது நாள்களும் யார் வீட்டிலும் இறைச்சி உண்பதில்லை. மேலும் குழம்பு தாளிப்பது, பொறிப்பது, வறுப்பது எண்ணெய்ப் பலகாரங்கள் செய்வதில்லை. உரல், உலக்கை சத்தம் கேட்பதும் கூடாது என்கின்றனர் பெரியகோட்டைவாழ் மக்கள். தீட்டு, இறப்புச் சடங்குகளில் கலந்துகொள்வதும் கூடாது என்கின்றனர்.

### ஓடுகள்

முளைப்பாரி வளர்ப்பதற்கு பயன்படுத்தப்படும் மண்ணாலான தண்ணீர்க் குடத்தின் மேல்பாதியாக இருக்கும்படியான மட்கலனே ஓடு எனப்படுகிறது. ஓடானது மானா மதுரையிலிருந்து பெரியகோட்டை கிராமம் சார்பாக மொத்தமாக ஒரே மாதிரியாகவும் வாங்குகின்றனர். தனிநபர் ஓடுகள் கிடையாது.

### எரு சேகரித்தல்

முளைப்பாரி துவங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன் பெண்கள் வயல் வெளிகளுக்குச் சென்று மாடு, ஆட்டெருக்களைப் பொறுக்கி கூடைகளில் சேகரித்து முளைப்பாரி வளர்க்கும் இடத்திற்குக் கொண்டு வந்து கொட்டி வைத்து இடித்துச் சலித்து வைத்துக் கொள்கின்றனர். இதனுடன் கரம்பை மண்ணையும் சேர்த்து வைத்துக்கொள்கின்றனர்.

### முத்து சேகரித்தல்

முத்து என்பது முளைப்பாரி வளர்க்கப் பயன்படுத்தப்படும் நவதானியங்கள் ஆகும். முளைப்பாரி போடுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் வரிவசூல் செய்த பணத்தில் இருந்து முத்துக்களை வாங்க அருகே உள்ள நகரமான மதுரை சென்று பலசரக்குக் கடையில் வாங்கி வந்து அருள்மிகு உலகுடைய அம்மன் திருவடிகளில் வைத்து தூப தீபாராதனை காண்பித்து வழிபாடு செய்தபின் முளைப்பாரி வளர்க்கும் இடத்தில் கொண்டு சென்று வைக்கின்றனர்.

**முளைப்பாரி வளர்க்கும் இடம்**

பெரியகோட்டை கிராமத்தின் வெள்ளாள சமூகத்தினைச் சார்ந்த திருமண மண்டபத்தில் முளைப்பாரி வளர்க்கப்படுகிறது. குளிர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக மண்டபத்தின் முன் தென்னை ஓலைத் தடுக்கினால் கொட்டகை போடப்படுகிறது. மண்டபத்தின் முன் வாயில் கதவுக்குப் பின் தடுக்கினால் ஒருவர் மட்டும் உள் நுழையுமாறு தடுத்துக் கட்டப்படுகிறது. முளைப்பாரி வளர்த்து மறு செவ்வாய் வெளிக்கொணரும் வரை முளைப்பாரி வளர்க்கும் இருவர்தவிர வேறு யாரும் உள்ளே செல்ல அனுமதியில்லை.

**முளைப்பாரி வளர்ப்பவர்**

தற்போது முளைப்பாரி வளர்ப்பவர் அன்னியேந்தல் கிராமத்தைச் சேர்ந்த செந்தில்குமார் என்பவர். இவருடன் உதவியாக இருப்பவர் பெரியகோட்டையைச் சார்ந்த முத்துமாயாண்டிபிள்ளை என்ற ராசு பிள்ளை. இவர்கள் இருவர் மட்டுமே எட்டு நாள்களும் பாதுகாப்பாக வளர்க்கின்றனர். முளைப்பாரி வளர்க்கும் செந்தில்குமார் அவர்கள் திருவிழா நடைபெறும் ஆண்டில் கிராம வரவு செலவு கணக்குப் பார்க்கும் பதினான்கு கரைகாரர்களில் எவரோ அவர்கள் வீட்டில் மட்டுமே உணவு உண்கின்றார். மற்றவர்கள் வீடுகளில் தண்ணீர்கூட வாங்கி அருந்துவதில்லை. ராசுப்பிளை முளைப்பாரி வளர்ப்பது ஒரு தவம் என்றும் அது ஒரு வரம் என்றும் மெய் சிலிர்த்துச் சொல்கிறார். முளைப்பாரிக்குத் தினமும் காலை, மதியம், மாலை ஆகிய மூன்று வேளையும் தூபதீபாராதனை காண்பித்துத் தண்ணீர் தெளிப்பதாக செந்தில்குமார் கூறுகிறர்.

**திங்கள் கிழமை முளைப்பாரிக்கு முத்து ஊறவைத்தல்**

ஆடி மாதம் அமாவாசை முடிந்து அதன்பின் வரும் திங்கள் கிழமை இரவு முத்து ஊறவைக்கிறார்கள். முத்து ஊறவைப்பதற்கு ஆண்டிகவுண்டன்கரை மற்றும் வைரவகவுண்டன் கரை பங்காளிகளின் வீட்டு பெண்கள் உலகுடைய அம்மன் கோயிலிலிருந்து வெண்கலப் பானையில் தண்ணீர் நிரப்பி வேப்பிலை இட்டுக் கொண்டு வருவது இதுவரை வழிவழியாக நடைபெற்று வருகிறது. மந்தையம்மன் கோயிலில் வேளார் வீட்டில் வாங்கி வந்த மண் பானைகளில் தண்ணீர் நிரப்பி முத்துக்களை அதில் கொட்டி ஊறவைக்கிறார்கள். அதை எடுத்து முளைப்பாரி வளர்க்கும் மண்டபம் கொண்டு சென்று வைக்கிறார்கள். முத்து ஊறவைத்தபின் ஊரிலுள்ளோர் யாரும் வெளியூர் சென்று தங்குவதில்லை.

**செவ்வாய்க் கிழமை முத்து பரப்புதல்**

செவ்வாய்க் கிழமை ஓடுகளின் அடிப்பாகத்தில் குச்சிகள் சொருகி அதன்மேல் வைக்கோலை பரப்பி வைக்கிறார்கள். வைக்கோலின் மேல் இடித்துச் சலித்து எரு, கரம்பை மண்ணை ஓடு முழுவதும் நிரப்பி ஓட்டின் அடிப்பாகம் வரை தண்ணீர் விரவும் அளவு தெளித்து வைத்துக்கொள்கிறார்கள். மாலை ஐந்து மணி அளவில் உலகுடைய அம்மனை வழிபாடு செய்து கிராமப் பெரியோர் வாழ்வரசிப் பெண்கள் முளைப்பாரி வளர்க்கும் திருமண மண்டபம் சென்று ஓட்டில் முத்துக்களைப் பதிக்கின்றனர். அதன்பின் தூபதீபாராதனை காண்பித்து அங்கிருந்து கரகம் எடுக்கும் கன்னிப் பிள்ளையுடன் அனைவரும் மந்தையம்மன் கோயில் சென்றடைகின்றனர். கரகத்தை இறக்கி மந்தையம்மன் கோயிலில் வைத்துவிட்டு மந்தையம்மன் கோயிலைச் சுற்றிப் பெண்கள் அனைவரும் கும்மி கொட்டுகின்றனர். கும்மி கொட்டி முடிந்து ஆண்கள் ஒயிலாட்டம் ஆடிய பின் கரகத்தை எடுத்து முளைப்பாரி வளர்க்கும் மண்டபம் சென்று வைக்கின்றனர். இவ்வாறு இரண்டு, மூன்று, நான்காம் நாள்கள் (புதன், வியாழன், வெள்ளிக் கிழமைகள்) தினமும் நடைபெறுகின்றன.

### ஓடுகளின் எண்ணிக்கை

பெரியகோட்டை கிராமத்தில் பெரும்பாலும் எழுபது ஓடுகள் அளவிலேயே போடப்படுகிறது. முதல் ஆறு ஓடுகள் கோயில் ஓடுகள். அவை முறையே

அருள்மிகு உலகுடைய அம்மன் கோயில் ஓடு
அருள்மிகு. சிங்கம்புணரி சேவுகபெருமாள் கோயில் ஓடு
அருள்மிகு. பச்சமுடைய ஐயனார் கோயில் ஓடு
அருள்மிகு. வடக்கு அம்மன் கோயில் ஓடு
அருள்மிகு. முனியாண்டி கோயில் ஓடு
அருள்மிகு. கன்னிமார் கோயில் ஓடு

என்ற அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. அடுத்ததாக பெரியகோட்டை வாழ் வெள்ளாள இன பெருமக்களின் பதினான்கு கரைகாரர்களுக்கு ஓர் ஓடு வீதம் பதினான்கு ஓடுகள். பதினான்கு கரைகள் முறையே

ஆண்டிகவுண்டன் கரை ஓடு
வைரவகவுண்டன் கரை ஓடு
சங்கிலிகவுண்டன் கரை ஓடு
முடிமேல்கவுண்டன் கரை ஓடு
முத்துகன்னிகவுண்டன் கரை ஓடு
சோளகவுண்டன் கரை ஓடு
வீரணகவுண்டன் கரை ஓடு
அழகுகவுண்டன் கரை ஓடு
இருளாண்டிகவுண்டன் கரை ஓடு
முத்துஇருளாண்டிகவுண்டன் கரை ஓடு
பெரியசாமிகவுண்டன் கரை ஓடு
ராமகவுண்டன் கரை ஓடு
ராமலிங்ககவுண்டன் கரை ஓடு
பழனி கவுண்டன் கரை ஓடு

“வேண்டுதல், நேர்த்திக்கடன் இவற்றை அடிப்படையாகக்கொண்டு நாட்டுப்புறத் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. விளைச்சல் பெருக நாட்டுப்புற மக்கள் தெய்வத்திடம் வேண்டிக்கொள்கிறார்கள்.”[1] நேர்த்திக் கடன் ஓடுகள் பத்து ஓடுகள் என்றவாறு கணக்கிடப்படுகிறது. மீதம் உள்ள மறுசுற்று பதினான்கு கரைகாரர்கள், மூன்றாவது சுற்று பதினான்கு கரைகாரர்கள் என கணக்கிடப்படுகிறது. எஞ்சிய ஓடுகள், நான்காவது சுற்றில் பதினான்கு கரைகாரர்களுக்கும் போதவில்லை என்றால் குலுக்கல் முறையில் ஓடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப கரைகாரர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. மீதம் உள்ள கரைகாரர்களுக்கு அடுத்த ஆண்டு முன்னுரிமையாக ஓடுகள் எடுக்க வழங்கப்படுகிறது.

### கரகம் எடுத்தல்

முளைப்பாரித் திருவிழா முதல் எட்டு நாள்கள் (செவ்வாய் கிழமை முதல் மறு செவ்வாய் கிழமை வரை) முளைப்பாரி வளர்க்கும் இடத்தில் இருந்து மந்தையம்மன் கோயில் வரை கரகம் எடுக்கும் நிகழ்வு நடைபெறும். கரகம் என்பது வெண்கலச் சொம்பில் தண்ணீர் நிறைத்து அதில் வேப்பிலை இட்டு எடுத்துச் செல்வது.

கரகம் எடுப்பது கன்னிப் பெண்கள் மட்டுமே. பதினான்கு கரைகாரர்களில் ஆண்டிகவுண்டன் கரை மற்றும் வைரவகவுண்டன் கரைகாரர்களின் பங்காளி வீட்டில் இருக்கும் கன்னிப் பெண்களில் ஒருவர் முறைப்படி கரகம் எடுக்கிறார்கள்.

### கும்மிகொட்டுதல்

முத்து ஊறவைத்த நாளிலிருந்து பெண்கள் அனைவரும் மந்தையம்மன் கோவிலின் முன் கும்மி கொட்டுகின்றனர். ஆண்கள் தனியாக ஒயிலாட்டம் ஆடுகின்றனர். ஆண்கள் சிறு வயதில் இருந்து பெரியவர் வரை ஒயிலாட்டம் ஆடுகின்றனர். ஆண்கள் ஆடும் ஒயிலாட்டத்திற்கு ஆண்கள் மட்டுமே ஒயிலாட்டப் பாட்டு பாடுகின்றனர். பெண்கள் பாடி ஆண்கள் ஒயிலாட்டம் ஆடுவதில்லை. “நாட்டுப்புறத் திருவிழாக்கள் வாய்மொழி மரபுடன் பின்னிப் பிணைந்தவை ஆகும். நாட்டுப்புற மக்கள் இத்திருவிழாக்களின் போது நாட்டுப்புறப் பாடல்களைப் பாடி வழிபடுகின்றனர். பெண்கள் கும்மியடித்து கும்மிப் பாடல்களை விழாக்களின் போது பாடுகின்றனர்.”[2]

**கும்மி பாடல்**

**தானனை தானனை தானனை தானனை**
**முந்தி முந்தி விநாயகரே முக்கண்ணனார் தன் மகனே**
**கந்தனுக்கு முன் பிறந்த கணபதியே முன் வருவாய்**
**தாயே சரஸ்வதியே தாமரையில் பிறந்தவளே**
**கலைவாணி என் நாவில் குடியிருக்க வேணுமம்மா**
**அரண்மனையை சுத்தம் செய்து ஆத்தாளுக்கு காப்பு கட்டி**
**ஊரையெல்லாம் சுத்தம் பண்ணி உத்தமிக்கு காப்பு கட்டி**
**குயவனார் கொல்லையிலே கோலவண்ண ஓடெடுத்து**
**மதுரையிலே பார்த்துப் பார்த்துப் பக்குவமாய் முத்து வாங்கி**
**வாங்கி வந்த முத்தையெல்லாம் வகைவகையாய் ஊற வைத்து**

என்று விநாயகரை முதலில் வேண்டி முளைப்பாரி (அம்மா) வளர்ந்து மலையேத்தும் வரை பாடலைப்பாடி கும்மி கொட்டுகிறார்கள். “கும்மியடிக்கும் முன்பு பிற தெய்வங்களைப் பற்றி பாடும் முன்பாக கடவுள் வாழ்த்துப் பாடும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர்.”[3]

**சனிக்கிழமை (ஐந்தாம் நாள்)**

முளைப்பாரி வளர்க்கும் இடத்திலிருந்து இரவு எட்டு மணியளவில் கரகம் எடுத்து வரும்போது முளைப்பாரி ஓடு ஒன்றை வாழ்வரசிப்பெண் ஒருவர் தூக்கி வந்து மந்தையம்மன் கோயில் சுற்றி இறக்கி வைத்து தூபதீபாராதனை காண்பித்து மறுபடியும் மண்டபம் சென்று இறக்கி வைத்த பின் மந்தையம்மன் கோயிலில் பெண்கள் கும்மி கொட்டுகின்றனர். ஆண்கள் ஒயிலாட்டம் ஆடுகின்றனர்.

**ஞாயிற்றுக் கிழமை (ஆறாம் நாள்)**

முளைப்பாரி வளர்க்கும் மண்டபத்தில் இருந்து இரவு எட்டு மணிக்கு கரகம் எடுத்து வரும்பொழுது முளைப்பாரி ஓடுகள் இரண்டை, இரு வாழ்வரசிப் பெண்கள் எடுத்து வந்து மந்தையம்மன் கோயில் சுற்றி இறக்கி வைத்து தூபதீபாராதனை காண்பித்து மறுபடியும் மண்டபம் சென்று இறக்கி வைத்தபின் மந்தையம்மன் கோயிலில் பெண்கள் கும்மி கொட்டுகின்றனர். ஆண்கள் ஒயிலாட்டம் ஆடுகின்றனர்.

**திங்கள் கிழமை (ஏழாவது நாள்)**

ஏழாம் நாள் அன்று அம்மா கொலு விருப்பதாகக் கூறுகின்றார் ஜி. நத்தகோபால். அன்று ஊரில் எவ்வித சத்தமும் இல்லாமல் ஊரே அமைதியாக இருக்கிறது. அன்று இரவு கும்மி கொட்டுதில்லை. ஒயிலாட்டம் ஆடுவதில்லை. இரவு பத்து மணிக்கு மேல் ஆண்கள் சிலரும் வாழ்வரசிப் பெண்கள் சிலரும் மந்தையம்மன் கோயில் முளைப்பாரி கொண்டு வந்து இறக்கி வைப்பதற்கு ஏதுவாகப் பச்சைத் தென்னை ஓலையில் தடுக்கு செய்து கோயில் முழுவதும் குடிசை கட்டி மேலே மாத்து வேட்டி கட்டுகின்றனர். கோயிலின் முன்னால் போடப்பட்டிருக்கும் கொட்டகையில் வண்ணக் காகிதங்களாலும் வண்ண விளக்குகளாலும் அலங்காரம் செய்கின்றனர்.

**செவ்வாய்க் கிழமை (எட்டாம் நாள்)**

எட்டாம் நாள் செவ்வாய்க் கிழமையன்று காலை அனைவர் வீட்டிலும் இனிப்புக் கொழுக்கட்டை செய்து உண்கிறார்கள். தெருமுனைகளில் இரண்டு மரம் நட்டு வைக்கோல் பிரியில் வேப்பிலை சொருகி தோரணம் கட்டுகிறார்கள். முளைப்பாரியைச் சுற்றி மஞ்சள் கிழங்குடன் கூடிய மஞ்சள் கயிறைக் கட்டுகின்றனர். அதனுடன் கதம்பம், வெற்றிலை பாக்கு, காதோலை கருகமணி சேர்த்து வைத்துக் கட்டுகின்றனர். அத்தப்புழுங்கல் அரிசிச் சோறு அடைகாத்த கோழி, முட்டை சமையல் செய்து மண்பாண்டத்தில் வைத்து மண்டபத்தில் முளைப்பாரி முன் வைத்துத் தூபதீபாராதனை

காண்பிக்கப் பெறுகிறார்கள். அன்று மாலை அனைவரும் முளைப்பாரி வளர்க்கும் மண்டபம் முன் வந்து கூடுகிறார்கள். கிராமப் பெரியோர்களும் வ.உ.சி.மன்ற இளைஞர்களும் கோயில் பூசாரியும் சிலம்பாற்றிற்குச் சென்று பூக்கரகம் கட்டுகின்றனர். பூக்கரகம் கட்டி முடித்தவுடன் பூசாரி பூக்கரகத்தை தலையில் வைத்துக்கொள்ள மேளதாளங்கள் முழங்க வான வேடிக்கையுடன் முளைப்பாரி வளர்க்கும் மண்டபத்திற்கு வருகிறார்கள். மண்டபத்தில் தூபதீபாராதனை கண்பித்தவுடன் பெண்கள் அனைவரும் முளைப்பாரி ஓடு தூக்குவதற்கு ஆயத்தமாகிறார்கள். கோயில் ஓடு, கரைகாரர்கள் ஓடு, நேர்த்திக்கடன் ஓடுகள் எடுப்பவர் என வரிசைப்படி பெண்களின் பெயர்களை நிருவாகத்தார் வாசிக்க ஒவ்வொரு பெண்களாக முளைப்பாரியைத் தலையில் தூக்கிக்கொண்டு மந்தையம்மன் கோயில் சென்று வரிசையாக இறக்கி வைத்து கும்மி கொட்டுகிறார்கள். பூக்கரகம் எடுக்கும் பூசாரி, கரகம் எடுக்கும் கன்னிப் பிள்ளை, அத்தப்புழுங்கல் அரிசிச் சோறு அடைகாத்த கோழி, முட்டை சமையல் செய்துமண்பாண்டத்தில்வைத்துத்தலையில் தூக்கி வருபவர் முளைப்பாரிக்கு முன் வருகிறார்கள். அத்தப்புழுங்கல் அரிசிச் சோறு அடைகாத்த கோழிக்கறி, முட்டை சமைத்த உணவை மண் பானையில் வைத்து மந்தையம்மன் கோயிலில் முளைப்பாரியின் முன் வைக்கிறார்கள். ஆண்கள் ஒரே வண்ண உடை அணிந்து ஒயிலாட்டம் ஆடுகின்றனர். சிறிது நேரம் அவரவர் வீடு சென்று உணவு உண்ட பின் மீண்டும் மந்தையம்மன் கோயில் முன் பெண்கள் கும்மி கொட்ட, ஆண்கள் ஒயிலாட்டம் ஆட என அன்று இரவு முழுவதும் விழித்திருக்கிறார்கள். மந்தையம்மன் கோயிலில் முளைப்பாரிக்கு நான்கு காலப் பூசை நடைபெறுகிறது. அதிகாலை நான்கு மணியளவில் நடைபெறும் பூசையின்போது பூசாரி முளைப்பாரிக்கு மாவிளக்கு வைத்துத் தீபமேற்றுகிறார். மக்கள் மகப்பேறு வேண்டியும் நோய் நீங்க வேண்டியும் மாவிளக்கை பிரசாதமாகப் பெற்று உண்கின்றனர்.

### புதன் கிழமை (ஒன்பதாம் நாள்)

ஒன்பதாம் நாள் அம்மனை மலை ஏத்தும் நாள். அன்று அனைவர் வீட்டிலும் இறைச்சி சமைத்து உண்கின்றனர். அன்று மாலை அனைவரும் மந்தையம்மன் கோயில் முன் கூடுகின்றனர். பூசாரி தூபதீபாராதனை காண்பித்து அனைவருக்கும் திருநீறு பிரசாதம் வழங்குகிறார். பெண்கள் கும்மி கொட்டியவுடன் ஆண்களும் ஒயிலாட்டம் ஆடுகின்றனர். அதன்பின் வரிசை முறைப்படி ஓடுகளைத் தலையில் தூக்கிக்கொண்டு அருள்மிகு உலகுடைய அம்மன் கோயில் சென்று இறக்கி வைத்துக் கும்மி கொட்டுகின்றனர். பூசாரி அம்மனுக்கும் முளைப்பாரிக்கும் தூபதீபாராதனை காண்பித்து அனைவருக்கும் திருநீறு பிரசாதம் வழங்குகிறார். அங்கிருந்து முளைப்பாரியை தூக்கிக்கொண்டு சிலம்பாறு சென்று முளைப்பாரி கரைக்கும் இடத்தில் முளைப்பாரியை வட்டமாக வைத்து பெண்கள் சுற்றிக் கும்மி கொட்டுகின்றனர். பின் முளைப்பாரியைச் சுற்றி கட்டியிருக்கும் மஞ்சள் கயிறை எடுத்துக்கொண்டு ஆற்றில் முளைப்பாரியை மலை ஏத்திவிட்டு ஓட்டினை கழுவிக்கொண்டு வந்து மந்தையம்மன் கோயிலில் வைத்துக் கீழே விழுந்து வணங்கிவிட்டு அவரவர் வீடு சென்று சாமியறையில் மஞ்சள் கயிறை வைத்து வழிபாடு செய்தபின் மஞ்சள் கயிறைக் கைகளில் கட்டிக்கொள்கின்றனர்.

### முடிவுரை

பயிர் விளையப் பரிசோதனை செய்யப் பயன்படுத்திய முளைப்பாரி நாளடைவில் மக்கள் மனதில் தெய்வ நம்பிக்கையின் அடிப்படையில் ஆடி மாதம் நடைபெறும் திருவிழாவாகவும் மக்கள் மனநிறைவு விழாவாகவும் நடைபெற்று வருகிறது. முளைப்பாரி எடுத்தால் மக்கட்பேறு, மழைப்பேறு கிட்டும் என்றும் வேளாண்மை

செழிப்பாக இருக்கும் என்பது பெரியகோட்டை வாழ் வெள்ளாள இனப்பெருமக்களின் நம்பிக்கைகயாகவே இன்றளவும் இருந்து வருகிறது. இயற்கை உரங்களினால் வேளாண்மை செழுமையடையும் என்பதை முளைப்பாரிக்குப் பயன்படுத்தப்படும் இயற்கை உரங்களை வைத்து அறியலாம்.

**உதவிய நூல்கள்**

1. சுப்பிரமணியன், பெ. தமிழர் திருவிழாக்களும் பண்பாடும்
2. முனைவர் குருசாமி சித்தர் & முனைவர் தே.ஞானசேகரன். 2000. தமிழர் பண்பாட்டு வரலாறு